செ. கு. எண்: 316 நாள் : 03.12.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 3.12.2013

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் வட்டம், சிவகாமி நகரைச் சேர்ந்த மீனவர் திரு. சதீஷ்குமார் என்பவர் 4.11.2013 அன்று கடலில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது கடலில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் வட்டம், கத்திவாக்கம் கிராமம், தாழங்குப்பம் பகுதியைச் சேர்ந்த மீனவர் திரு. மோகன் என்பவர் 12.11.2013 அன்று கத்திவாக்கம் கடல் பகுதியில் மீன் பிடிக்க சென்ற போது, படகு கவிழ்ந்ததில் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்த மீனவர்கள் சதீஷ்குமார் மற்றும் மோகன் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மீனவர்கள் சதீஷ்குமார் மற்றும் மோகன் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9